விஜயபாரதம்
மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY
பிலவ, ஆவணி - 1 செவ்வாய் 17.08.2021 மலர் - 2, இதழ் - 133

# கோவிலை கைவிட மறுத்த பூஜாரி


விஜயபாரதம்

தலிபான்கள் ஆப்கானிஸ்தான் தலை நகரான காபூலைக் கைப்பற்றி ஆட்சியையும் கைப்பற்றினர். அந்த நாட்டில் நிலவும் வன்முறை, குழப்பம் காரணமாக சொந்த நாட்டு மக்களே தங்கள் உயிர்களைப் பாதுகாத்துக்கொள்ள நாட்டை விட்டு பெருமளவில் வெளியேறுகின்றனர். அதிபர் அஷ்ரப் கனியும் நாட்டை விட்டு வெளியேறினார். ஆனால் காபூலில் உள்ள ரத்தன் நாத் என்ற ஹிந்து கோவிலின் பூஜாரி பண்டிட் ராஜேஷ் குமார் தனது உயிரைக் காப்பாற்றிக்கொள்ள காபூலை விட்டு வெளியேற மறுத்துவிட்டார். அவருடைய பயணம், தங்குமிடத்திற்கு ஏற்பாடு செய்ய பலர் முன்வந்தாலும் அதனை அவர் ஏற்கவில்லை. 'என் முன்னோர்கள் இந்த கோவிலில் நூற்றுக்கணக்கான ஆண்டுகள் சேவை செய்துள்ளனர். நானும் அதனை தொடர்வேன். அதை கைவிட மாட்டேன். தலிபான்கள் என்னைக் கொன்றால், நான் அதை என் கடவுளுக்கான சேவையாக கருதுவேன்' என்றார் பூஜாரி ராஜேஷ்.

# சுதந்திர போராட்ட வீரர் ஈ.வே.ரா.



விஜயபாரதம்

தேசிய கொடியை ஏற்றி வைத்து உரை நிகழ்த்திய தமிழக முதல்வர் மு.க ஸ்டாலின், 150 ஆண்டுகளுக்கு முன்னே விடுதலைக்காக போராடியது தமிழ் மண். வீரபாண்டிய கட்டபொம்மன், ஊமத்துரை, வேலுநாச்சியார், வ.உ.சி., திருவிக , பெரியார், பாரதிதாசன், பசும்பொன் முத்துராமலிங்கதேவர். ம.பொ.சி, உள்ளிட்ட பல்வேறு தலைவர்கள் பங்கெடுத்துள்ளனர். இவர்களின் வீரமும், தியாகமும் என்றும் மறக்க முடியாதவை. வ.உ.சி., யின் 150வது பிறந்த நாள் அரசு விழாவாக கொண்டாடப்படும் என்று கூறியுள்ளார். பாரத விடுதலைக்கு ஈ.வெ.ரா போராடினாரா, தமிழக மக்களிடம் தவறானவரலாற்றுத் தகவலை ஸ்டாலின் திணிக்கிறாரா, முதல்வருக்கு தவறான தகவல் துண்டு சீட்டில் எழுதி கொடுக்கப்பட்டதா? ஆங்கிலேயர்கள் நாட்டை விட்டு சென்றுவிட்டால் நம்மால் ஒரு குண்டூசிகூட தயாரிக்க முடியாது, தமிழ்நாட்டை மட்டுமாவது ஆங்கிலேயர்கள் ஆள வேண்டும், ஆகஸ்ட் 15 நமக்குதுக்கதினம் எனகூறியவர்தானே ஈ.வே.ராமசாமி நாயக்கர் என இணையதளவாசிகளும் பொதுமக்களும் கேள்வி எழுப்பி வருகின்றனர்.

# தேசிய கீதம் பாடிய 1.5 கோடி பேர்



விஜயபாரதம்

நம் நாட்டின் 75வது சுதந்திர ஆண்டை, 'ஆசாதி கா அம்ருத் மஹோத்சவ்' என்ற பெயரில் அடுத்த ஆண்டு ஆகஸ்ட் 14வரை கொண்டாட மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இதையொட்டி தேசிய கீதத்தை தங்கள் சொந்த குரலில் பாடி அந்த வீடியோவை அரசு இணையதளத்தில் ஆகஸ்ட் 15ம் தேதிக்குள் பதிவேற்றம் செய்யும் வகையில் மத்திய கலாசாரத்துறை அமைச்சகம் ஒரு புதிய நிகழ்ச்சியை அறிவித்திருந்தது. 'பல்வேறு மாநிலங்கள், உலகின் பல்வேறு நாடுகளில் உள்ள பாரதத்தினர், பாரத வம்சாவளியினர் இதில் ஆர்வமுடன் பங்கேற்றனர். குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைத்து வயதினரும் உற்சாகமாகக் கலந்து கொண்டனர். இதுவரை 1.5 கோடிக்கும் அதிகமான பதிவுகள் வந்துள்ளன. இந்த முயற்சி அனைவருக்கும் ஊக்கத்தையும், உற்சாகத்தையும் அளித்துள்ளது' என அமைச்சகம் தெரிவித்துள்ளது.

# ஔவையார் விருது



விஜயபாரதம்

சிறந்த சமூக சேவையாற்றியதற்காக தமிழக அரசு சார்பில் சக்தி மசாலா நிறுவனர் சாந்தி துரைசாமிக்கு, ஔவையார் விருது வழங்கப்பட்டது. கடந்த 1977ல், 10 ஆயிரம் ரூபாய் முதலீட்டில் சக்தி மசாலா நிறுவனத்தை துவக்கினார் சாந்தி துரைசாமி. 1977ல் சமூக சேவை செய்ய சக்தி தேவி தொண்டு அறக்கட்டளையை துவக்கினார். மேலும், உடல், மனநலம் குன்றிய குழந்தைகளுக்கு இலவச சிகிச்சை அளிக்க சக்தி மறுவாழ்வு மையம், சக்தி மருத்துவமனை மூலம் 10 மருத்துவர்களைக் கொண்டு 15 கிராம மக்களுக்கு இலவச மருத்துவ ஆலோசனைகள், கொரோனா, வெள்ள பாதிப்பு உள்ளிட்டவற்றிற்கு தாராளமாக நிதி அளிப்பது என பல்வேறு தொண்டு பணிகளை அவர் செய்து வருகிறார். மாநில அரசின் ஔவையார் விருதுத் தவிர பல்வேறு விருதுகள், கௌரவ டாக்டர் பட்டமும் இவருக்கு வழங்கப்பட்டுள்ளன.

# மக்கள் ஆசி யாத்திரை



விஜயபாரதம்

மத்திய அரசின் திட்டங்களை மக்களுக்குச் சென்றடையச் செய்யும் வகையில் 'மக்கள் ஆசி யாத்திரை' எனும் சுற்றுப் பயணத்தை மத்திய இணை அமைச்சர் எல்.முருகன் கோவையில் நேற்றுத் தொடங்கினார். வரும் 18ம் தேதி வரை இந்த யாத்திரை நடைபெற உள்ளது. கோவையை அடுத்து நீலகிரி, ஈரோடு, திருப்பூர், நாமக்கல் உள்ளிட்ட மாவட்டங்களுக்கும் செல்லவுள்ளார். 'மத்திய இணையமைச்சராக பொறுப்பேற்றபின் மக்களை சந்திக்க தமிழகத்தில் யாத்திரை செல்கிறேன். நாடு முழுவதும் மக்கள் ஆசீர்வாத யாத்திரை நடைபெறுகிறது. கொரோனா தடுப்பு விதிகளை பின்பற்றியே நிகழ்ச்சிகளை நடத்துகிறோம்'' என்று முருகன் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறினார்.

# காங்கிரஸில் இருந்து விலகிய எம்.பி.

அசாம் மாநிலத்தில் இருந்து ஏழு முறை நாடாளுமன்ற உறுப்பினராக தேர்வு செய்யப்பட்ட சந்தோஷ் மோகன் தேவின் மகள் சுஷ்மிதா தேவ். இவரும் தற்போது, காங்கிரசின் நாடாளுமன்ற உறுப்பினராக உள்ளார். அவர் தற்போது காங்கிரஸ் கட்சியில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளார். இதற்காக அவர் எந்த காரணத்தையும் குறிப்பிடவில்லை. சுஷ்மிதா தேவ் தனது ராஜினாமா கடிதத்தை சோனியா காந்திக்கு அனுப்பி விட்டார். கட்சியுடன் தனது முப்பதாண்டு கால பயணத்தை நினைவுகூர்ந்து, கட்சித் தலைவர்கள், தொண்டர்களுக்கு நன்றி தெரிவித்தார். தனது டுவிட்டர் பக்கத்தில் அகில இந்திய மகிளா காங்கிரசின் முன்னாள் உறுப்பினர் எனவும் மாற்றிவிட்டார்.



விஜயபாரதம்

# காங்கிரஸும் கொடி சர்ச்சையும்



விஜயபாரதம்

நமது பாரத தேசத்திற்கான சுதந்திரத்தை ஏதோ தாங்கள் மட்டுமே ஆங்கிலேயரிடம் இருந்து பெற்றுத் தந்ததாகக் கூறி சுபாஷ் சந்திரபோஸ், வீர சாவர்க்கர் உள்ளிட்டோரின் தியாகங்களை திட்டமிட்டே மறைப்பது காங்கிரசின் வழக்கம். ஆனால், அப்படி சொல்வதேற்ப அவர்கள் நடக்கிறார்களா என்றால் அதுவும் இல்லை. நாடு முழுவதும் 75வது சுதந்திர தின விழா கோலாகலமாக கொண்டாடப்பட்டு வருகிறது. இதனையொட்டி, அரசு அலுவலகங்கள், பள்ளிகள், அரசியல் கட்சி அலுவலகங்கள், வீடுகள் என பல்வேறு இடங்களில் தேசிய கொடியை ஏற்றி மக்கள் மரியாதை செலுத்தினர். அதன் ஒருபகுதியாக, கோவை மாவட்ட காங்கிரஸ் கட்சி அலுவலகத்தில் நடைபெற்ற விழாவில், தமிழக காங்கிரஸ் கமிட்டியின் செயல் தலைவர் மயூரா ஜெயக்குமார் கொடியேற்றினார். ஆனால் அவர், தேசியக் கொடியை தலைகீழா ஏற்றினார். கொடிக்கம்பத்தில் முக்கால் பகுதி செல்லும்போதுதான் கொடி தலைகீழாக இருந்ததை அவர்கள் கண்டுபிடித்தனர். மீண்டும் கொடியை கம்பத்தில் இருந்து இறக்கி சரி செய்து ஏற்றினர். இதே போல மற்றொரு நிகழ்வில், தேசியக் கொடியை யார் ஏற்றுவது என்பதில் காங்கிரஸ் கட்சியை சேர்ந்த தொண்டர்கள் இடையே கடுமையான வாக்குவாதம் ஏற்பட்டது. முடிவில், ராகுல் காந்தி வாழ்க, சோனியா காந்தி வாழ்க என்று கோஷம் எழுப்பியவாறே தேசியக் கொடியை ஏற்றினர் காங்கிரஸ் தொண்டர்கள். பல தியாகிகள் உயிர் தியாகம் செய்து பெற்றுத்தந்த சுதந்திரத்தை ஏதோ ராகுலும் சோனியாவும் பெற்றுத் தந்ததைப்போல அவர்கள் எழுப்பிய கோஷம் மக்களிடம் அருவறுப்பை ஏற்படுத்தியது.

# மின்சார வாகனம் மானியம்



விஜயபாரதம்

பலத்த எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் மின்சார வாகன சந்தையில் ஒரு வழியாக ஓலா ஸ்கூட்டர் நேற்று 75வது சுதந்திர தின விழாவை முன்னிட்டு அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. 121 கிலோமீட்டர் செல்லும் ஓலாவின் S1 ரக ஸ்கூட்டர் விலை 99,999 ரூபாயாகவும்181 கிலோமீட்டர் செல்லத்தக்க வண்டியின் விலை 1,29,999 ரூபாயாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. ஓலா அறிமுகத்திற்கு முன்பே 24 மணி நேரத்தில் 1 லட்சம் வாகனங்களுக்கு முன்பதிவு செய்யப்பட்டது. இதுவே மக்கள் மத்தியில் எந்தளவுக்கு மின்சார வாகனங்களுக்கு ஆதரவு உள்ளது என்பதை தெரிவிக்கிறது. உலகின் இரண்டாவது பெரிய வாகன சந்தையான பாரதத்தில், மின்சார வாகனம் ஒரு புரட்சியை ஏற்படுத்தும் என்பது திண்ணம். ஓசூரில் இதற்கு பிரம்மாண்ட ஆலையை ஓலா நிறுவனம் கட்டி வருகிறது. மத்திய அரசு மானியத்தைத் தவிர, மின்சார வாகனங்களுக்கான மாநில் அரசு மானியம் ஒவ்வொரு மாநிலத்துக்கும் வித்தியாசப்படுகிறது. குஜராத், அதிகபட்ச மானியம் வழங்குவதால் அங்கு இவ்வாகனம் அங்கு ரூ. 79,999 என்ற விலையில் கிடைக்கும். டெல்லியில் ரூ. 85,099 ஆகவும், ராஜஸ்தானில் ரூ.89,968 எனவும், மஹாராஷ்டிராவில் ரூ.94,999 என்ர விலையிலும் கிடைக்கும். ஆனால், தமிழகத்திலேயே தயாரானாலும் இங்குள்ள மாநில அரசு மானியம் ஏதும் தராததால் மொத்த பணமும் கட்டியே மக்கள் வாங்க வேண்டியிருக்கும். தமிழக அரசு இதனை குறித்து ஆலோசித்தால் நல்லது.

# வாகன மறுசுழற்சி மையம்

மிகப்பெரிய ஆட்டோமொபைல் நிறுவனங்களுல் டாடா மோட்டார்ஸ், குஜராத் மாநில அரசுடன் இணைந்து அகமதாபாத்தில் பழைய வாகனங்களை அழித்து மறுசுழற்சி செய்யும் மையத்தை அமைக்க உள்ளது. மாநில அரசின் துறைமுகங்கள் மற்றும் போக்குவரத்து துறையுடன் இதற்காக இரு தரப்பு புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது. 'டாடா மோட்டார்ஸ் நிறுவன வரலாற்றில் இது ஒரு மைல்கல், பாரதத்தில் பாதுகாப்பான, தூய்மையான வாகனங்களை ஊக்குவிப்பதற்காக எடுக்கப்பட்ட சரியான நடவடிக்கை, சுற்றுசூழல் மேம்பாடு, சுழற்சிப் பொருளாதாரக் கட்டமைப்பு ஆகியவற்றில் இது ஒரு முக்கிய படி' என டாடா மோட்டார்ஸின் முன்னணி நிர்வாகி கிரிஷ் வாக் தெரிவித்துள்ளார்.

விஜயபாரதம்



# ஆப்கன் சர்ச்சையில் காங்கிரஸ் தலைவர்

உதித் ராஜ் என்ற காங்கிரஸ் கட்சித் தலைவர், அவரின் கருத்துகளால் அடிக்கடி சர்ச்சைகளில் சிக்கிக்கொள்பவர். உன்னாவ் பெண்கள் மரணம் தொடர்பாக சமூக ஊடகங்களில் ஒரு போலி செய்தியை பரப்பியதற்காக இவர் மீது குற்றப்பத்திரிகை ஒன்றும் தாக்கல் செய்யப்பட்டது. எஸ்.சி, எஸ்.டி சட்டத்தை பயன்படுத்தி ஒரு பத்திரிகையாளரை மிரட்டியது என சில குற்றச்சாடுகளும் இவர் மீது உண்டு. இந்நிலையில், சமீபத்தில் உதித் ராஜ் தனது டுவிட்டர் பதிவில் 1960 களில் ஆப்கானிஸ்தானில் பெண்களின் சுதந்திரம் குறித்த ஒரு புகைப்படத்தை பகிர்ந்து கொண்டார், 'அக்காலத்தில் ஆப்கனில் பெண்கள் சுதந்திரமாக இருந்தனர். ஆனால் அவர்கள் தற்போது மதவெறியின் காரணமாக பெண்கள் அடிமைத்தனம், புர்காவால் சிறைப் படுத்தப்பட்டுள்ளனர். பாரத முஸ்லிம் சமூகமும் தற்போது அந்த திசையில்தான் நகர்கிறது' என கருத்துத் தெரிவித்தார். அவரது இந்த கருத்தை பொறுத்துக்கொள்ள முடியாத சுமார் 7 ஆயிரம் முஸ்லிம்கள் அவரை கடுமையாக எதிர்த்துள்ளனர். பலர் அவரது தாய், சகோதரிகளையும் கடுமையாகவும் கீழ்தரமாகவும் தாக்கி கருத்துகள் பதிவிட்டனர். அவரைப் பன்றியின் மகன் என்றும் தூற்றியுள்ளனர்.

விஜயபாரதம்



# பாரத சூரிய மின்னாற்றல்



மத்திய மின்சக்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சர் ஆர்.கே.சிங், ஒரு மெய்நிகர் நிகழ்வில் அமெரிக்க இந்திய வர்த்தக கவுன்சில் (யு.எஸ்.ஐ.பி.சி) உறுப்பினர்களுடன் உரையாடினார். அப்போது அவர், 'காலநிலை மாற்ற சீற்றத்தைத் தணிப்பதற்கும், பாரதத்தின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதற்கும், தூய்மையான, நிலையான மற்றும் மலிவு விலை ஆற்றலை அதிகரிப்பது அவசியம். வரும் 2030க்குள் 450 ஜிகாவாட் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் இலக்கை அடையும் தீவிர முயற்சியில் பாரதம் முன்னேறிக் கொண்டுள்ளது. கார்பன் உமிழ்வை குறைப்பதில் பாரதம் தீவிரமாக செயல்பட்டு வருகிறது. சூரிய மின்கலங்கள், பேட்டரிகள் தயாரிக்கும் பி.எல்.ஐ திட்டம், பசுமை ஹைட்ரஜனை ஊக்குவித்தல் உள்ளிட்ட உற்பத்தி மற்றும் ஏற்றுமதிகளை ஊக்குவிக்கும் அரசின் பல்வேறு திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன' என எடுத்துரைத்தார். நிகழ்ச்சியில் கலந்து கொண்ட தொழில்துறையினர், 100 ஜிகாவாட் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திறனை அடைந்ததற்கு மத்திய அரசுக்கு வாழ்த்துத் தெரிவித்தனர்.

விஜயபாரதம்

# சர்ச்சுகளில் தடுப்பூசி

கேரளாவில் கொரோனா தடுப்பூசிகளின் முதல் டோஸிற்காகவே லட்சக்கணக்கான மக்கள் காத்திருக்கின்றனர். சாதாரண மக்கள் தங்கள் தடுப்பூசிகளுக்கு முன்பதிவு செய்ய முடியவில்லை. ஆனால் ஆளும் கம்யூனிச கட்சியினருக்கும் அவர்களது குடும்பத்தினருக்கு மட்டும் தடுப்பூசி கிடைக்கிறது என்ற குற்றச்சாட்டு ஏற்கனவே உள்ளது. இந்நிலையில், கொல்லம் மாவட்டத்தில் உள்ள சக்திக்குளங்கராவில் உள்ள கிறிஸ்தவ தேவாலயத்தில் சுகாதார அமைச்சர் வீணா ஜார்ஜின் முயற்சியால் மாநில அரசு இலவச தடுப்பூசி இயக்கம் நடத்தி வருகிறது. இது அங்கு பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. பல மத மற்றும் தொண்டு நிறுவனங்கள் தடுப்பூசி இயக்கங்களை நடத்தி வருகின்றன, ஆனால் அது தனியார் மருத்துவமனைகளுடன் இணைந்து நடத்தப்படுகிறது. ஆனால், ஒரு மாநில அரசே ஒரு மத நிறுவனத்தில் தடுப்பூசிகள் விநியோகிப்பது இதுவே முதல்முறை என்பது குறிப்பிடத்தக்கது.



விஜயபாரதம்

# கிறிஸ்தவ தேவாலயத்திற்கு அபராதம்

கேரள மாநிலத்தில் உள்ள எர்ணாகுளம் அங்கமாலி மறைமாவட்டத்திற்கு சொந்தமான சிரோ மலபார் தேவாலயம், வங்கிக் கடனை திருப்பிச் செலுத்துவதற்காக என கூறி தனது சர்ச் நிலத்தை 58 கோடிகளுக்கு விற்றது. ஆனால், கடனை திருப்பி செலுத்தாமல் அந்த பணத்தில் இரண்டு நிலங்களை வாங்கியுள்ளது. வாங்கிய நிலத்திற்கும் பணத்தை ஒழுங்காக தரவில்லை. நில பரிவர்த்தனை பத்திரங்களிலும் அசல் சந்தை விலையை விட குறைவான தொகையே குறிப்பிடப்பட்டு முறைகேடுகள் செய்யப்பட்டுள்ளன. ஆனால் அந்த பனமும் பேராயர் கணக்கில் முறையாக வரவு வைக்கப்படவில்லை. எனவே, நிலத்தை மறுவிற்பனை செய்வது, லாபம் ஈட்டுவது மட்டுமே குறிகோளாகக் கொண்டு சர்ச் நிர்வாகம் செயல்பட்டுள்ளது கண்டறியப்பட்டது. இதனையடுத்து வருமான வரித்துறை, சிரோ மலபார் தேவாலயத்திற்கு ரூ. 3.5 கோடி அபராதம் விதித்துள்ளது.

விஜயபாரதம்





விஜயபாரதம்

# மதன்லால் திங்க்ரா

ஆங்கிலேய சிறையில் அவரை பார்க்க சிறைத்துறை அனுமதியுடன் ஒல்லியான இளைஞர் வந்திருந்தார். இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்தனர். ஒருவர் முகத்தில் புன்னகை; மற்றவர் கண்களில் கண்ணீர் அரும்பியது. "தங்கள் தரிசனத்திற்கு வந்திருக்கிறேன்... நான் உங்களுக்கு ஏதாவது செய்ய முடியுமா?" என்றார் பார்க்க வந்தவர். சிறைக்குள் இருந்தவரோ, "ஒரு சீப்பு தரமுடியுமா? நாளை என் மணப்பெண்ணை முத்தமிடுகையில் கலைந்த தலையுடன் இருப்பதை நான் விரும்பவில்லை," என்றார். சீப்பும் சில தாள்களும் கைமாறின.

மரணமெனும் மணப்பெண்ணுக்காகக் காத்திருந்த அந்த இளைஞனின் பெயர் மதன்லால் திங்க்ரா. அவரது இறுதி அறிக்கையைப் பெற்றுக்கொண்டு கனத்த இதயத்துடனும் பெருமிதத்துடனும் விடைபெற்ற அந்த மனிதர் வீர சாவர்க்கர்.

தேசபக்தர்களுக்கு கடுமையான தண்டனைகள் ஆங்கிலேய அரசு வழங்கி வந்தது. அந்தத் தண்டனைகளில் முக்கிய பொறுப்பதிகாரி கர்ஸன் வில்லி. அவர் இந்திய இம்பீரியல் சென்டரில் நடக்கும் கூட்டத்தில் அவன் கலந்து கொள்வதாக இருந்தது.

அந்தக் கூட்டத்திற்கு வந்த மதன்லால் திங்க்ரா, கர்ஸன் வில்லியை நேருக்கு நேராகச் சுட்டு எமனுலகு அனுப்பினார். கூட்டம் சிதறி ஓடியது. திங்க்ரா காவலர்கள் வரும்வரை நின்றார். அதனை குறித்து பத்திரிகையாளர்கள் எழுதியபோது, அந்தக் கூட்டத்திலேயே அமைதியுடன் காணப்பட்டது திங்க்ரா மட்டும்தான். திங்க்ரா நினைத்திருந்தால் தப்பிச் சென்றிருக்கலாம். ஆனால் அதனைச் செய்யவில்லை. லண்டனிலேயே பாரதத்தின் தேசியத்தின் சிங்க முழக்கத்தைக் கேட்கச்செய்துவிட்டார்' என்றனர்.

ஆங்கிலேய ராஜ்ஜிய விவகாரத்துறையில் உயர்பதவி வகித்த பிரிட்டிஷ் கவிஞர் வில்ப்ரைய்ட் ஸ்காவென் ப்ளண்ட், "எந்த ஒரு கிறிஸ்தவ இறைசாட்சியும் தனக்கு எதிரான தீர்ப்பினை இத்தனை அச்சமின்மையுடன் எதிர்நோக்கியதில்லை. பாரதம், இவரைப் போல 500 இளைஞர்களை உருவாக்கினால் நிச்சயமாக விடுதலை அடைந்துவிடும்" என்றார். விசாரணையின்போது மதன்லால் திங்க்ராவின் நாடித்துடிப்புகூட இயல்பாகவே இருந்ததை மருத்துவ அதிகாரியும் உறுதிப்படுத்தியுள்ளார்.

மதன்லால் திங்க்ராவுக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது குறித்து டைம்ஸ் பத்திரிகை எழுதியது: "தண்டனை அறிவிக்கப்பட்டபோது அவரிடம் எந்த சலனமும் இல்லை. இது அவரது மேன்மைக்குச் சாட்சியாக அமைந்தது. விசாரணைக் கூண்டிலிருந்து திங்க்ரா புன்னகையுடன் வெளியேறினார்."

ஒரு கிறிஸ்தவ பாதிரி அவருக்காக பிரார்த்தனை செய்ய முன்வந்தார். "நான் ஒரு ஹிந்து; உங்கள் பிரார்த்தனை எனக்குத் தேவையில்லை" எனப் புன்னகையுடன் மறுத்துவிட்டார் திங்க்ரா.

# வலையில் சிக்கிய மீம்கள்




